**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of civil procedure)**

**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**

**KEERANUR**

**CASE NO.OS.No. 120/2021**

**Deposition of witness of Plaintiff – P.W.1(முருகேசன்)**

**07.11.2023**

**7 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

பிரதிவாதிகளின் வீடு எனது வீட்டில் இருந்து 50 அடி தூரத்தில் உள்ளது. பிரதிவாதிகளும் நாங்களும் ஆரம்பத்தில் இருந்து தனித்தனியாக குடியிருந்து வருகிறோம் என்றால் இல்லை. ஒன்றாகதான் குடியிருந்து வருகிறோம். நாங்கள் ஒன்றாக குடியிருந்து வருகிறோம் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. அவ்வாறு கூட்டு அனுபவத்திற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அம்மா பெயர் லெட்சுமி. வெள்ளைச்சாமியின் அம்மா பெயர் பாப்பம்மாள். மூக்கன் அம்பலம் உயிருடன் இருந்தபோதே சர்வே எண்.111 சொத்தை புதுக்கோட்டை நிலவள வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றிருந்தார் என்றால் சரிதான். அந்த கடன் தள்ளுபடி ஆகிவிட்டது. நிலவள வங்கியில் பாக்கியம் மற்றும் வெள்ளைச்சாமி ஆகியோர் தவணை தொகை செலுத்தினார் என்ற விவரம் எனக்கு தெ

ரியாது. எனக்கு கூட்டு அனுபவம் இல்லை என்பதால்தான் எவ்வித விவரம் தெரியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நிலவள வங்கி கடனை அடைப்பதற்காக வங்கியில் இருந்து அறிவிப்பு வந்த விவரம் எனக்கு தெரியாது. அந்த கடனை அடைப்பதற்கு பாக்கியம் தனது நகைகளை விற்றும் தனது அப்பா வீட்டில் இருந்து கொடுத்த ரூ.3,00,000/- வைத்து கடனை அடைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு கடனை அடைத்ததால் வெள்ளைச்சாமி மற்றும் சின்னையா சேர்ந்து பாக்கியத்திற்கு கிரைய பத்திரம் எழுதி கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பாக்கியம் பெயருக்கு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண எண்.1780/2020 என ஆவணம் எழுதி கொடுத்துள்ளதால் அந்த சொத்து பாக்கியத்தின் சுயார்ஜித சொத்து என்றால் சரியல்ல. பாக்கியம் நல்லெண்ண அடிப்படையில் கிரையம் வாங்கிய நபர் என்றால் சரியல்ல. பாக்கியம் சட்டப்படி கிரையம் வாங்கியுள்ள காரணத்தால் அதில் எங்களுக்கு பாக உரிமை கிடையாது என்றால் சரியல்ல. எங்களது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தைப் பொறுத்து நாங்கள் முறையான வாரிசுகள் அல்ல என்றால் சரியல்ல.

(2 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)